# புலிப்பாணி

## சிதம்பரம்-25

## சக்கரம்-மகா மந்திர விஞ்சை

தாமரை நூலகம், சென்னை - 26.

# புலிப்பாணிச்சித்தர்
# அருளிய
# சிதம்பரம் 25


எழுதியவர்

டாக்டர் A.K. சந்தனராஜா R.I.M.P.



தாமரை நூலகம்

எண்: 7, என்.ஜி.ஒ. காலனி

வடபழனி, சென்னை-26

தொலைபேசி எண்- 480 0249

*website : www.intamm.Com nool thamarai*

*email : thamarai @ intamm.com*

| | | |
|---|---|---|
| தாமரை வெளியீடு எண் | : | 243 |
| இரண்டாம் பதிப்பு | : | மே 2015 |
| மூன்றாம் பதிப்பு | | 2017 |
| | | ஆகஸ்ட் 2021 |

உரிமை பெற்றது.

## நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புலிப்பாணிச் சித்தர் அருளிய சிதம்பரம்25 |
| நூலின் தன்மை | : | சித்த மருத்துவம் |
| பதிப்பாசிரியர் | : | எஸ்.பி. இராமச்சந்திரன் |
| வெளியிட்டோர் | : | தாமரை நூலகம்<br>7, என்.ஜி.ஓ.காலனி,<br>வடபழனி,<br>சென்னை - 600 026. |
| பதிப்பு ஆண்டு | : | 2021 |
| உரிமை | : | பதிப்பகத்திற்கு |
| நூல் வடிவம் | : | டெமி 1 X 8 |
| தாளின் தன்மை | : | 14.4 கி.கி. வெள்ளைத்தாள் |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளி, |
| மொத்த பக்கங்கள் | : | 68+ IV |
| பிரதிகள் | : | 1000 |
| பைண்டிங் | : | செக்ஷன் |
| நூலின் விலை | : | ரூ. 50.00 |
| கணிப்பொறி | : | கார்த்தி கிராபிக்ஸ்,<br>சென்னை 26 |
| அச்சிட்டோர் | : | கிரியேடிவ் ஆப்செட்,<br>சென்னை 34 |

# முன்னுரை

புலிப்பாணி சித்தர் பதினெண் சித்தர் குழுமத்தைச் சார்ந்தவர். இவர் போகருடைய மாணவர் என்று அவர் எழுதிய நூல்கள் மூலம் அறிய வருகிறது. இவர் சில பாடலின் முடிவில் போகருடைய ஆசியால் பாடினேன் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் கீழ்வரும் நூல்கள் எழுதியுள்ளதாக தம் பாடலில் குறிப்பு தந்துள்ளார். அவைகள் 1.மருத்துவம் 500, 2. சோதிடம் 300, 3. ஜாலம் 200, 4.கொக்கோகம் 150, 5. பலதிரட்டு 100, 6. ஞானம் 96, 7. சண்முகபூசை மார்க்கம் 30, 8. சிமிழ் வித்தை 25, 9. சிதம்பரபூசை 25, 10. தேவி பூசை மார்க்கம் 25.

மேற்கண்ட செய்திகள் புலிப்பாணி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய பலதிரட்டு, ஜால – சிதம்பரம் – என்ற நூலில் காணப்படுகின்றன. இந்த நூல் அ. வீராசாமி நாயக்கர் அவர்களால் 1924ல் வெளியிடப்பட்டுள்ளது.

புலிப்பாணி சித்தர் சிதம்பர பூசை 50 – என்ற நூல் ஒன்று வெளி வந்துள்ளது. தவிர சிதம்பர பூசை 25 என்ற நூல் ஒன்றும் உள்ளது. இந்த இரு நூல்களில் சில பாடபேதங்கள் உள்ளன. சிதம்பர பூசை 50க்கும்–25க்கும் பஞ்சாட்சரத்தின் எண்ணியல் இலக்கம் மாறுபடுகிறது. இருப்பினும் புலிப்பாணியின் சிதம்பர பூசை – 25– ன் படி அதற்கு மகா – மந்திர விஞ்ஞை வரையப்பட்டுள்ளது.

சிதம்பர பூசையை முதன் முதலில் தண்டாயுதபாணி இறைவனால் வரையப்பட்டு முறையாக வழிபாடு செய்தார்கள் என்று கூறப்படுகிறது. அவருக்கு பின் கிரேதாயுகத்தில் பிரமன் சிதம்பர பூசை செய்தார் என்றும், அதனையடுத்து திரேதாயுகத்தில் கவுசிகர் சிதம்பர பூசை செய்தார் என்றும், இவரை தொடர்ந்து துவாபர யுகத்தில் போக நாதர் சிதம்பர பூசை செய்தார் என்றும் போகருக்கு பின் கலியுகத்தில் புலிப்பாணி சித்தர் பூசை செய்தார் என்றும் இந்நூலாசிரியர் செய்திகள் தருகிறார். சிதம்பர பூசை மார்க்கம் மிகவும் தொன்மையானது என்று தெரியவருகிறது. சிதம்பர பூசை என்பது சைவ மார்க்க பூசையாகும் முதலும் முடிவுமாக இப்பூசை மார்க்கம் அமைந்துள்ளதாகக் கருத இடமுண்டு . புலிப்பாணி சித்தர் பழனித்தலத்தில் ஓர் சைவ மடம் தொடங்கி சிதம்பர பூசைமார்க்கத்தின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

இந்த சிதம்பர மகா மந்திர விஞ்ஞை நாம் நமது வசதிக்கு ஏற்றபடி

பலவித உலோகங்களில் வரைந்து கொண்டு நித்திய வழிபாடு செய்யலாம். இதன் வழியே சிவனை நாம் காணலாம். சக்தியையும் பூசித்து அருளைப் பெற்று தரிசனம் செய்யலாம். இந்த சிதம்பர மகா மந்திர விஞ்ஞையின் வழியே மகா விஷ்ணு, அயன், எண் சக்திகள், பஞ்ச மகா சக்திகள், இன்னும் பற்பல தெய்வங்களை தரிசிக்கலாம். சிதம்பர மகா மந்திர விஞ்ஞையின் பூசனையால் எண் கருமங்கள் சித்தி பெறலாம். எனவே சிதம்பரமே பரிபூரணம் என்பார்கள். பரிபூரண நிலைக்கு சென்றவர்களே முத்திப்பேறு அடைகிறார்கள்.

சிதம்பர மகா மந்திர விஞ்ஞையின் மூலம் ஆதார வழிபாடும் செய்யலாம், அதற்குரிய மந்திரங்கள் தனியே உண்டு. கவுசிகர் இந்த சிதம்பரத்தின் துணையால் காயத்திரி தரிசனம் பெற்றார். அதற்கும் தனி மந்திரங்கள் உண்டு. சிதம்பர மந்திர சக்கரத்தால் மானுடன் விரும்பிய தெய்வீகப் பேறுகளைப் பெறுதற்குரிய அனைத்து வித்துக்களும் அடங்கியுள்ளன.

புலிப்பாணி சித்தர் சிதம்பர பூசை – 25 – மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். இதற்கு உரை எழுதப்பட்டுள்ளது. தவிர வரை படம் மூலம் விளக்கம் தரப்பட்டுள்ளது. சிதம்பரச்சக்கரம் 25 அறைகள் கொண்டு, அறைகளின் மேல் சூலம் அமைத்து, சூலத்தின் மேல் சக்கரம் வரைந்து, அதனை சுற்றி திருவாசி பொருத்தி முழு மந்திரச்சக்கரமாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான சிதம்பர மகா மந்திர விஞ்ஞை சக்கரம் இதுவரை யாரும் வரைந்து வெளிக்கொண்டு வரவில்லை. இந்தச் சக்கரம் நீண்ட காலம் ஆய்வு செய்து பொருளுணர்ந்து முழுமையாக முடிக்க 15 ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை பூசிப்பவர்கள், அதற்குரிய பலன்கள் பெறுவார்கள், மானிடர்கள் இதனை பூசித்து இறையருளைப்பெற்று சுத்த பரிபூரண மேலை நிலை இடமான சிதம்பரத்தைப்பெற்று உய்வார்களாக . சிவம். சிவம்.

C.30/TNGO. குடியிருப்பு
பேஸ் – 3– சத்துவாச்சாரி –
வேலூர் –9

A.K. சந்தனராஜா

உ

ஓம் நம சிவய

# புலிப்பாணி சித்தர்

அருளிய

## சிதம்பரம் – 25 –ன்

### அருள் மிகு மகா மந்திர விஞ்ஞான விளக்கம்

தேவ ருறைகின்ற சிற்றம்பலம் என்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பர மென்றுந்
தேவர் உறைகின்ற திருஅம் பலமென்றுந்
தேவர் உறைகின்ற தென் பொது வாமே - 866 - திருமூலர்.

**உரை:**

தேவர் உறைகின்ற = உண்மை இயற்கை ஞானப் பிரணவ இறையருள் மிகு மேதகு பேரான்மாக்கள் வசிக்கும் சிவப் பொருளான அணுக்கருப்பொருள்கள் குடியுள்ள திருநகர்.

சிதம்பரம் = சித்+அம்+ ப+ ரம். =சித்:- தகராகாசம் என்னும் மிக நுட்பமான விண் வெளியின் கண் ஞானவியல் பேரான்மாவாக குடியுள்ள இறையருள் கருப் பொருளாம். = அம்:- அகரப்பிரணவ அக்கரமாக உறைந்து நாத வடிவத்தில் இருக்கும் ஞானப்பேரான்மா = ப:- பேரண்ட விண் வெளியில் பகர மேடையில் ஞானப் பிரணவப்பேரான்மா வீற்றிருக்கும் இடம். =ரம்:-அருட்சோதி வடிவமாக ஞானா காசத்தில் பேரண்ட விண் வெளியில் திகழும் சிதாகாச அணுக் கருவான சிவப்பொருள்.

சிற்றம்பலம் = சிறு +அம் +ப +லம். = சிறு:- தகரம் என்பர். நுட்பம் என்பர். சூக்கும நிலையை விட மிகமிக நுண்மைப் பொருளாக விளங்கும் நிலையிடமாகும்.

= அம்: - நாத வடிவ அருட் பிரணவ அக்கர நிலையிலுள்ள இறையருள் சிவபொருள்.

= ப:- பகர பீடமாக மேலை நிலைப்பொருள்கள் வீற்றிருக்கும் ஆசனம்.

= லம்: வடிவ நிலை. அதாவது விந்து நிலை. பஞ்ச பூத அமைப்பில் மண் நிலை. திருவடியாகவும் திருமுடியாகவும் மாறி மாறி நிற்கும் வித்து நிலை. அருள் ஞானப் பிரணவநிலை. மகா மனுநிலை.

திருவம்பலம் = திரு + அம் (வம்) +ப+லம்.

= திரு: - இறையருள் மிகு மேதகு ஞான பிரணவ பேரான்மாவாக விளங்கும் சிவப்பொருள் தகராகாச வடிவத்தில் ஏகாந்த நிலையில் அருட்பெருஞ் சோதி வடிவத்தில் உறைந்துநிற்கும் பெருமை வாய்ந்த அனைத்து செல்வப் பேறுகள் பெற்றத். திரு நகரில் கருநிலையில் திருவடியாக திகழும் சிறப்பியல் பெற்ற சிவம்.

தி = த் + இ ; த் = தகராகாசம் . இ= இகர அருட் பிரணவம். பெண்மை நிலை.

ரு = ர்+உ; ர் = சுடரொளியாக நிற்கும் நிலை. உ= சக்தி நிலை.

= அம் (வம்): - இறையருள் நாத வடிவமாக தோன்றி நிற்கும் அகர அருட் பிரணவ அக்கரம் . சிவம் சக்தியாக மாறி நிற்கும் நிலை. இது "வம்" என்ற சொல்லாக நிற்கும் . அகரம் வகரமாகி ஏக பரிபூரண

நிலையில் இருக்கும் இயற்கை நிலை. கால் எழுத்து.

= ப: - பரம் என்று கூறப்படும் பேரண்ட விண் வெளியில் உயர்ந்த பீடத்தில் நிலைத்து என்றும் அழியாமல் ஏகப் பொருளாக திகழும் நிலையில் அப்பீடத்தில் வீற்றிருக்கும்.

=லம்:- தமிழ் மொழியில் லகரம் மற்றும் ளகரம் ஆக இரு மெய்கள் உண்டு லகரம் பருமைப்பொருளையும் ளகரம் நுண்மைப்பொருளையும் குறிக்கும். லகரம் கீழ் மூலம் என்றும், ளகரம் மேல் மூலம் என்றும் கூறலாம். லகரம் மண்ணில் செயல்படுகிறது. ளகரம் விண்ணில் செயல்படுகிறது. மானுடத்தில் குறிக்கும், குயத்திற்கும் இடையில் லகரம் செயல்படும். ளகரம் புருவ மையத்தில் செயல்படும்.

தென் பொதுவாம் = தென்+பொது+ ஆம்.

= தென்: -அழகு, பேரழகு,

= பொது: அம்பலம், சபை, மன்றம்.

= ஆம்:-அசைச்சொல், ஊக்குவிக்கும் சொல் . இயக்கும் சொல். பரந்து நிறைந்து ஊர்ந்து விரவி செல்லும் நிலை.

விளக்கம் = சிதம்பரம் : சி+த+ம்+ப+ர+ம்.

சி=ச்+அ+இ+விந்து+நாதம்.

சிகார பஞ்சகம்.

த = த் + அ

ம் = ம்

ப = ப் + அ

ர = ர் + அ.

ம் = ம்.

விடை : ச்+த்+ம்2 +ப்+ர்+அ4+இ+விந்து (0) நாதம் (ரீங்)

இதனை:- சித் அம் சிம் தம்
சத் பம் சம் அம்சம்.
அசத்ரம் இம்

மேற்கண்டவாறு நாம் பகுத்து பொருளாய்வு செய்யலாம்

**1.சிகரம்:** பற்றுக் கோடுடைய மூலம் - அடி வயிறு - மேல் வயிறு - நெஞ்சம் - கழுத்து -புருவநடு ஆகிய ஆதாரங்கள் ஆறும், பற்றுக் கோடில்லாததுமான ஞாயிறு மண்டலம் -திங்கள் மண்டலம் - தீ மண்டலம் - சமனை - உன் மனை - அதீதம் என்ற ஆறு நிலைகள் உண்டு. ஆக மேற்கண்ட நெருங்க முடியாத, ஆறாதார அகநிலை ஒளிக்கு அப்பாலுக்கப்பாலாய், அதன் மேலுமாய் விளங்குவது தனித்தன்மை வாய்ந்த "அருட் பெரும் பேரறிவுப்பெருவெளி" யாகும். அவ்விடத்தே பொருந்தி எழுந்தருளியிருப்பவன் நமது முழுமுதற் றலைவனாகிய இறையருள் மிகு மேதகுஞான பிரணவ பேரான்மாவான சிவப்பொருள்கள் ஆவார்கள். அவ்விடத்து அருமையும் - பெருமையும்- சிறப்பையும் - தனித்தன்மையும் உணர்த்தக் கூடிய அம்ச மந்திரமான சிகார எழுத்து பொருந்தி நிற்கும் .

அச் "சி" கர எழுத்தின் அளவில் பேரொளியின் சிறப்பைப் பேசுவது இயலாத செயலாகும். அவ்விடத்து திருப்பெயராகிய மந்திரம் என்றும், 'சிகர' -த்தை உரை காணுதல் இயலாது.

அவ்விடத்தைப் பற்றி சிந்தனை செய்யும் காலத்து ஓர் வடிவமாக நினைவுறும் கருவியாகி மனத்துக்கண்முன் தோன்றும். உரைக்கும் காலத்து ஒலி உருவமாக செவிக்குப் புலனாகும். இவ்விரண்டு நிலையையும் கடந்து விரவிநின்றுணரும் மேல் நிலை ஆதலின் அதனை " அருட் பெரும் இறையருள் மிகு ஞானப்பிரணவ சோதிப்பெருவெளி" என்பர் . அதனை அதன் திருவருளால் உணர்வின் கண் உணர்த்தி யருளி ஆருயிர் ஆன்மாவுக்கு " சிகரத் திருவடி" தலைசூடி அருளும். இந்நிலை " அசி" என்ற மந்திரப் பொருளை உணர்த்தும். ஆருயிர் ஆன்மாவின் முடிவில் அருள் ஞான பிரணவ பேரான்மாவான சிவப்பொருள் திருவடியினை சூட்டி அருள்வான் . அப்படி யருளியபோது தளையான கன்மத்தால் வரும் வினையும், மாயையால் வரும் மயக்கமும், ஆணவத்தால் வரும் மலமும் கட்டகன்று ஒழிந்து நிற்கும் .

ஆணவக்கட்டறலும், மாயாகாரியப் பொருள்களிடம் பதிந்துள்ள நெஞ்சின் மயக்கம் நீங்கிய ஆருயிர் ஆன்மாவுக்கு திருவடி யுணர்வாகிய சிவஞானத்தை அடிமையாகி மானுட ஆருயிருக்கு வழங்கி அருளுகிறான். அவ்வுணர்வுப்பெற்ற ஆருயிர் மேலாம் நிலையாகிய "சிகர" -வண்ணத்தைத் தந்து, தன் வண்ணமாகிய அருள் நிலை கொண்டு அருள்வாம். அதனால் ஆறா இன்பத் திருவடியின் மேல் நிலைப்பெற்று மானுட ஆன்மா உயர்வு பெரும். அத்தகைய நிலை மேற்கொண்டு து ய்க்கும் மானுட ஆன்மா செம்மை நலம் பெற்றதைச் " சொல்லிறந்த சுத்த சுகுண சுக நிலை" -என்பர்.

திருவருள் துணையால் பொறிபுலன் வழி செல்லும் மனத்தை அடக்கி ஆள வேண்டும். வேறுபட்ட நெறிகளில் செல்லும் ம்னச் செலவினை அகற்ற வேண்டும். 'இ' -கரம் ஊர்ந்த சகரத்தை 'சி -என்ற ஒட்டெழுத்துடன் , அதாவது "வ"-கரம் என்னும் எழுத்து சேர்த்து "சிவ"என அகவழிபாடு செய்யுங்கள் அல்லது ஓதி இன்புறுங்கள். அவ்வாறு நாள் தோறும் ஓதி வரும் காலத்து மனம் - செம்மையுற்று சிகர நெறியில் நிலைத்து அதன் சார்பாகக் கருதப்படும். 'ய' -கரத்தையுக் கூட்டிச் "சிவயசிவ" - என ஓத வேண்டும். அவ்வாறு தொடர்ந்து ஓதுங்கால் மானுட உள்ளத்தில் அடிப்படை "சிகர ஒளி" - உள்ளொளியாகத் தோன்றும். இதற்கு " சிகரம்" எனக் குறிக்கப்படுகிறது. 'சிவ' - பொருளை அறிவின்பமாகவும் அழைக்கப்படுகிறது.

'சி கரத்தை பஞ்சகமாக பகுத்து பார்த்தலுக்கு சிகர பஞ்சகம் என்று உரை காண்பர். சி= ச்+அ+இ+விந்து+ நாதம் என்பார்கள். இதனை " ச்+அ "-ச என்பர். ச எனில் உண்மை இயற்கை இறையருள் மிகு ஞான பிரணவ சுத்த சத்து சிவப் பொருள் என்பர். திருவருள் என்றும் கூறுவர். அ = அறிவு என்பர்- இ=இன்பு என்பர். இதனையே அ= சிவம் என்பர். இ = இன்பம் அனுபவிக்கும் மானுட ஆன்மா என்பர். இந்த மானுட ஆன்மாவே 'இ' கரம் என்றும் கூறப்படுகிறது. அந்த மானுட ஆன்மாவே திருவடி யுணர்வு பெறுவதால் இகரம் என்று சொல்லப்படுகிறது. இகரமாகிய மானுட ஆன்மா உண்மை இயற்கை இறையருள் மிகு ஞானப்பிரணவ சுத்த சத்து சிவ பொருளான" சகரத்தை" உணர்ந்து , கண்டு பின், அகரமான

ஞானப் பிரணவ இறையருள் சுத்த சிவப் பேரான்மாவான சிவப்பொருளுடன் இணைந்து உறைந்து கலந்து ஆனந்தம் அனுபவித்து விந்து என்னும் வரி வடிவம் என்ற சுழியாக நின்று இணைந்து நாதமான ஓசைத் தன்மையாய் கலந்து நிற்பதாகும்.

எனவே'சி' - என்னும் சிறப்பின் முதலெழுத்து உண்மை இயற்கை இறையருள் மிகு மேதகு ஞான பிரணவச் சத்து சிவப்பொருளைத் திருவருளால் காட்டி ஞானப்பிரணவ அருளியல் அறிவு சிவபொருளிடத்தில் இணைய வைத்து ஆனந்தத்தை ஒருங்கமைய ஓர் வடிவமாய்த் திகழும் உண்மை வன்மை யுணர்ந்து இன்புறுவதே சிதம்பர நிலையாம்.

அகரம்- சகரம் இறையருள் மிகு ஞானப்பிரணவ சிவப் பொருளுக்குரிய மந்திரப் படையாகும். மகரத்துடன் கூடிக் கலந்து " சகரம் " " சம் " அல்லது " சங் " - என்று சத்து மந்திரங்களாக இயங்கும். சம் எனில் சுகுணம் என்பர். சம் எனில் சுத்தம் என்பர். சம் எனில் சுகம் என்பர். சம் எனில் நன் நலம் என்பர். சம் எனில் மங்களம் என்பர். சம் எனில் வெண் வண்ணம் என்பர், சம் எனில் கங்கை என்பர். சம் எனில் திருச்சடை என்பர். சம் எனில் வித்து மந்திரம் என்பர். சம் எனில் சத்தி என்பர். சம் என்ில் அழகு என்பர். சம் எனில் அன்பு என்பர். சம் எனில் பிறப்பு என்பர். சம் எனில் முழுமை என்பர். சம் எனில் வெற்றி என்பர் - சம் எனில் நிறைவு என்பர். இந்த நிலையை யாரும் அறிந்திலர்.

அகரத்துடன் கூடிய சகரமாகிய 'ச' - என்னும் மறையினை எல்லாரும் அறிந்த பின் அகர சகரங்கள் மிக மிகத் தொன்மையானவை. இவைகள் அநாதி என்றும் கூறுவர்.

அகரம் சகரம் எப்பொழுதும் இருப்பதாகும். இவ்விரண்டும் அகரம் சிகரத்தைக் குறிக்கும். சகரம் வகரத்தைக் குறிக்கும். 'யகர' - எழுத்தில் இருவித ஒலி அலைக் குறிப்புகள் உண்டு. ஒன்று அகர ஒலி அலைக் குறிப்பாகும். இரண்டாவது யகர ஒலி அலை குறிப்பு உண்டு. இதில் சிகரம் சிவத்தை குறிக்கும். வகரம் சிவையைக் குறிக்கும். இவ்விருவரும் அத்தன் அன்னை என்பார்கள். அகரம் திருவடியையும் சகரம் திருச் சடையையும் குறிக்கும். இதில் திருவடி யும் திருச்சடையும் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டு நின்று சகரமாக விளங்கும்.

ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து கொண்டு இருக்கும். அகரம் - சகரம் - ககரம் புவனாபதியின் முக் கூடங்களைக் குறிக்கும். அகரம் செம்மை வண்ணம் கொண்டது. சகரம் வெள்ளை வண்ணம் கொண்டது. ககரம் பொன் வண்ணம் கொண்டது. இந்த மூன்று வண்ணமே முடிவில் சுடரொளியாகத் திகழும். இதற்கு மேற் கோளாக சூரியனை ஒப்பிடலாம். இந்த மூன்று மொழிச் சொல் எழுத்துக்கள் அகரம் = யகரமாகிய மானுட ஞானான்மாவைக் குறிக்கும். சகரம் வகரமாகி மாறி சக்தியாகிய அன்னையைக் குறிக்கும். ககரம் சிவமாகிய அத்தனைக் குறிக்கும். இந்த மூன்றும் " சிவய " - என்னும் முத்தி தரும் ஐந்தெழுத்தைக் குறிக்கும் . இறைவன் இவ்வாறு இருப்பதை அறிவாரில்லை . அத்தன்மையின் மெய்ஞ்ஞான சிவப்பொருளினை அறியும் அடியவருக்கு அச்சகரத்தின் வண்ணமாம் சதா சிவப்பொருள் தோன்றி அருள் வழங்கி சுத்த சுகுண சுகம் தரும் நன் நலங்களுடன் இறையருள் பேறு நல்கி ஆன்மாவை உய்யும் படி மேலை நிலை சிவப் பொருளைக் காட்டி சிறப்பிப்பார்கள்.

மந்திரங்களாகத் திகழும் சொற்களின் உண்மை நிலையை என்னவென்று நாம் இங்கு அறிய முற்படுவோம்.

1. சித் = என்றால் உண்மை இயற்கை பேரருள் - பேர்ழகு பேர்றிவு, பேராற்றல் இணைந்து செயல்படும் மேலாம் இருப்பிடமாகக் கொண்ட ஞான பிரணவ இறையருள் மிகு சிவப் பேரான்மாவின் கருவூலமாம். இவ்விடம் சித்தர்கள் கூறும் சித்துக்கள் அனைத்தும் தோன்றும் . இவ்விடத்தை ஞான அறிவியல் குறிக்கும் கருவிடமாகும். இந்த " சித் " - என்ற இடம் மேலான இறையருள் மிகு ஞானப்பிரணவ பேரான்மா[illegible] சிவப்பொருளின் திருவடி திலகமாக திகழுமிடமாகும். அனைத்து சித்துக்களின் ஆற்றல்கள் முறையாக செயல்படக்கூடிய நடப்புகள் நிகழுமிடமாகும். இவ் விடத்திலிருந்து எல்லா நிகழ்ச்சிகள் தோன்றி விரிவடைந்து வளர்ந்து பரவி நின்று , மீண்டும் அதே நிலைக்குச் சென்று இருப்புக் கொள்ளும். மானுட ஆருயிர்களின் மெய்கள் (தத்துவங்கள்) முழுதும் தேய்ந்து கழன்று விட்ட பின் இன்பநிலை அளிக்கும் பெருமை வாய்ந்த சிறப்பிடமாக விளங்கும். இவ்விடத்தைக் கண்ட மானுட ஆன்மா இன்ப நிலை

என்னும் ஆனந்த நிலை பெற்று இறவாப் பெருஞ் செல்வம் அடைந்து அதில் கலந்து உறைந்து நிற்குமிடமாகும். இவ்விடத்தின் குணங்கள் நினைத்தாலும் விவரிக்க இயலாத சாந்த சுகுண சுகம் நிறைந்த பேறு பெற்ற புனிதமிடமாகும்.

**2. சத் =** எனில் உண்மை இயற்கை அறிவு இன்ப மெய்ப் பொருளாய் என்றும் விளங்குவது இறையருள் மிகு ஞானப் பிரணவ சிவப்பொருளாம் . அந்த சிவப்பொருளுக்கு ' சத் ' = என்று மெய் ஞானம் பெற்றஇறை வடிவம் அடைந்த இறவாப் பெருஞ்செல்வம் பெற்ற நமது தமிழ்நாட்டு மெய்ஞ்ஞானச் சித்தர்கள் கண்ட உண்மையாகும்.

**3. அசத் =** எனில் காரண காரியத் தொடர்ச்சியாய்த் தோற்ற வொடுக்கம் உடையதாய் என்றும் அழிவில்லாததாய் இயற்கை உண்மையாய் இருப்பது "மலம் ". இந்த மலத்திற்கு "அசத் " என்று கூறப்படுகிறது. மனிதன் பிறந்தால் அவனுடன் " மலமும் " சேர்ந்து உடன் உறைந்து நிற்கிறது. அதே மனிதன் இறந்தால் அம் மலமும் அவனுடன் மறைந்து விடுகிறது. இந்த மலத்திலிருந்து எவன் ஒருவன் முழுக்க முழுக்க விடுபட்டு விடுகிறானோ அந்த மானுடனே " சித் " - என்ற இடத்தை எட்டிப் பிடிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**4. அம் =** எனில் இறையருள் மிகு ஞானப் பிரணவச் சிவப் பொருளைக் குறிக்கும். சிவப்பொருளே "அகர" பிரணவ அக்கரமாக நின்று செயல்படும் . இதனை திருமூலர் " ஆமே சிவங்கள் அகரர உகாரங்கள் " - என்று திரு மந்திரம் - 3000த்தில் கூறுகிறார். சிவங்கள் என்றால் சிவன் என்ற அத்தனும் சிவை என்ற அன்னையுமாம்.

**5. இம் =** எனில் திருவடி யுணர்வு என்பர். இகரம் என்ற மானுட ஆருயிருக்கு ' ச ' கரமானது உண்மை இயற்கை இறையருள் மிகு ஞானப்பிரணவ சுத்த சத்துவப் பொருளை உணர்வுறச் செய்து, அதன் பின் மேலை நிலைச் சிவஞானப்பொருளுடன் இணைந்து கலந்து உறைந்து நெகிழ்ந்து மகிழ்ச்சியால் இன்பம் தூய்த்து விந்து என்னும் வரிவடிவச் சுழியுடன் இணைந்து நாதத் தன்மையாய் கலந்து நிற்க உதவி செய்யும்.

**6. தம் =** எனில் தகராகாசம் என்பர். தகரம் என்றால் மிக மிக நுட்ப இடத்தைக் குறிக்கும். பேரண்ட விண் வெளியில் மிக

நுட்பத் தன்மை வாய்ந்த வான் வெளிக் கருவூலமாகும். நெஞ்சகம் என்று கூறுவார்கள். தம் எனில் தென்றல் என்றும், கூறுவார்கள். தம் எனில் மேலை நிலையில் விளங்கும் ஞான பிரணவ பேரான்மாவின் உயிர் வளி ( பிராணக்காற்று ) என்றும் கூறலாம்.

**7. பம்** = எனில் பேரண்ட விண் வெளியில் மிக உயர்ந்த இடத்தில் பகர வடிவத்தில் அமைந்த பீடமாகும். இறையருள் மிகு ஞானப்பிரணவ சிவப் பேரான்மாக்கள் சுத்த பரிபூரண நிலையில் இணைந்து கலந்து அமர்ந்த சுத்த சுகுண சிவ ஞான அருள் உறைவிடமாம். இந்த பகர மேடையில் இறையருள் மிகு ஞானப் பிரணவ சிவப்பேரான்மாக்கள் கலந்து உறைந்து பிணைந்து திலகமாக திகழ்ந்து அம் மேடையில் சுத்த சுகுண சுகம் தரும் பரிபூரண நிலையில் திருவடி முடியுடன் அமர்ந்து கம்பீரமாக வீற்றிருக்கும் அற்புத சிறப்பியல் பகர மேடையாகும். இந்த பகர மேடையுள்ளயிடம், மலத்தில் உழன்று நிற்கும் மானுட உயிர்கள் அறிய இயலாத இடமாகும் என்று திருமூலர் தமது திருமந்திரம் 3000 - த்தில் " ஆமே பரங்கள் அறியா விடம் என்ப " என்று கூறுகிறார்.

**8. ரம்** = எனில் நெருப்பு அல்லது தீ என்பார்கள். இந்த வித்து சொல் பஞ்ச பூதத்தில் ஒன்றாக செயல்படும் அமைவு பெற்றுள்ளது. இவ்விடத்தில் அது பொருளல்ல . இங்கு இறையருள் மிகு ஞானப் பிரணவ சிவப்பேரான்மா அருட் பெருஞ் சோதி வடிவமாக இருப்பதைக் குறிப்பதாகும் . இந்த வித்துச் சொல் மானுட மலங்கள் அனைத்தும் படிப்படியாக நல்வினை தீவினைக்கு தக்கவாறு கூட்டியோ குறைத்தோ எரித்து சாம்பலாக்கி ஒழிக்க வல்லது. அறிவுக்குத் தடையாகவுள்ள அறியாமை என்ற இருளையும் - மயக்கும் மருளையும் ஒழிக்கவல்லது.

**9.சிம்** = எனில் அனாதி மலமில்லாது. மானுட ஆன்மாக்கள் பக்குவப்பட்ட நிலையில் இகர அருள் பிரணவமாக திகழும். அது அகர ஞானப்பிரணவ சிவப் பொருளின் அருளை நாடிக் கலந்து இணைந்து ஆனந்த நிலை எட்டும். அந்த நிலையில் இகர அருள் பிரணவமாக உயர்வு பெற்ற மானுட ஆன்மா அகர ஞானப் பிரணவ சிவப்பொருளில் மெய்மறந்து உறையும் போது மானுட ஆன்மா இறையருள் மிகு சிவ பேரான்மாவாகத்

திகழ்ந்து சிகர வடிவம் பெற்று இறவாப் பெருஞ் செல்வம் அடைந்து என்றும் மீண்டும் இறவாமல் தடுத்தாட்கொள்ளும் உயர்வுடைய ஞான சிவப்பொருளாகும்.

**10. அம்சம்** = எனில் அகரம் - சகரம் இரண்டும் ஞான சிவப்பொருள்களாகும். அகரம் சிவனைச் சாரும். சகரம் சிவையைச் சாரும். இந்த இரண்டு ஞான சிவப்பொருள்கள் மானுட ஆருயிர்களுடன் பின்னிப் பிணைந்து நிற்கும் திருவுள்ளக் குறிப்பைக் குறிக்கிறது. அந்த சகரத்தின் வண்ணமாக சதா சிவப்பொருள்கள் தோன்றும்.

**11.மகரம்** (ம் - கரம்) = எனில் உயிர் ஒழிந்த மெய்யெழுத்து என்ற கூறப்படும். அவ்வக்கரம் ஊமை எழுத்து என்றும், மூங்கை எழுத்து என்றும், கூறுவார். இந்த எழுத்தில் உயிர் இணையாததால் ஒலி பிறக்காது. அதனால் " ம் "- என்று நிற்கும்.

கிணற்றில் போட்ட கல் மேல் நோக்கி மீண்டும் வெளியேறாமல் அடியில் சிவனே என்று கிடக்கும். உயிர் புணர்ந்தாலின்றி மெய்யெழுத்து இயங்காது. ஒலியாது. எழுச்சியுறாது. இந்த மகார அக்கரம் " ஓம் " - மொழியின் கண் மற்றும் பிறசொல்லில் பொருந்தி ஒரு மொழிச் சொல்லாக நிற்கிறது. 'ஓ' - என்பது இரு இறையருள் மிகு ஞானப்பிரணவப் பேரான்மாவான சிவப்பொருள்களின் கரு அணுக்கள் இணைந்ததால் உண்டானது. அந்த இரு கரு அணு அக்கரங்கள் 'அ' - 'உ' - என்பதாம்.

அந்த இரு அக்கரங்கள் இயற்கையிலே தன்னைத் தானே செயல்படுவதால் பேசும் எழுத்துக்கள் என்று அறியப்படுகிறது. இந்த இரண்டு பேசும் எழுத்துக்களான அகர உகரங்கள் மகாரத் தோடு பொருந்தினால் " ஓம் " - என்று உயர் நிலையில் கூறப்படுகிறது. இவ்வெழுத்துக்கள் 'அ' - ஆற்றலையும் 'உ' - அறிவையும் குறிப்பிடுவனாகச் செயல்படும். ஆற்றல் சக்தி யென்றும், அறிவை சிவம் என்றும் கூறுவர். சக்தி விந்து வாகவும், சிவம் நாதமாகவும் செயல்படும்.

எனவே இதனை ஆமையகம் என ஓதப்படுகிறது. ஓங்காரத்தை, அ + உ + ம் + விந்து + நாதம் என்று பிரித்துப்

பார்க்கப்படுகிறது. இதனை ஓங்கார பஞ்சகம் என்று சிவ மெய்ஞ்ஞான நிறையுடையோர் கூறுவர். ஆமையானது தனக்கு தொல்லை வருங்கால் இரண்டு கால்கள் + இரண்டு கைகள் + முகம் ஒன்று ஆக ஐந்து உறுப்புகளை உள்ளொடுக்கிவிடும்.

அதுபோல் ஆருயிர் இந்த ' ஓ ' மொழி சிறப்பால் ஐந்துறுப்பையும் தீமையின் கண் அடங்கி, நன்னெறியின் பால் உய்த்து நலம் புரியும் . அக்காலத்து அவ்வுயிர் ' ஓ ' - மொழி வயமாய் நிற்பதால் தன்னறிவாகிய சிற்றறிவு விலகி நிற்கும். இதுவே நாமய மற்ற நன்னியல்பாகும்.

ஊமை எழுத்தென்பதை ஓங்கார வடிவாகிய பஞ்சமை வாக்கெனவும், பேசும் எழுத்து வைகரி வாக்கு எனவும் கொண்டு, அதற்கியையப் பொருள் கூறுவ ரும் உண்டு. இந்த ஊமை எழுத்து சிதம்பரம் என்னும் மகா வாக்கியத்தில் இருமுறை வருவதை கவனிக்கத்தக்கது.

**கருத்து** :- இறையருள் மிகு ஞானப்பிரணவ பேரான் மாக்கள் நுட்பவடிவத்தில் இருப்பிடமாகக் கொண்டு ஆளும் திருவிடம் சிற்றம்பலம் என்னும் திரு நகரமாகும். இதனை சிதம்பரம் என்றும் கூறுவர். இதனையே திருவம்பலம் என்று பகர்வர். மேலும் அத்திருவிடத்தை உண்மை இயற்கைப் பேரழகு - பேரருள் - பேரறிவு - பேராற்றல் பொருந்தி நுட்பத் திருவடியாக விளங்கும் தூய்மை பெற்ற அற்புதங்கள் அனைத்தும் அடங்கி இருப்புக் கொண்டு திலகமாகத் திகழும் கருவூலமாகும். இதன் தொடர்பான புலிப்பாணி சிதம்பரம் - 25 - பாடல் பார்க்கலாம்.

## புலிப்பாணி சித்தர் அருளிய சிதம்பரம் – 25

### காப்பு

அத்தி முகன்றனை யளித்த வரனே காப்பே
அகலமெங்கும் நிறைந்து நின்ற வருளே காப்பு
முத்தி தரு வேதாந்த முதலே காப்பு
முப்புரத்தைத் தகர்த்தெரித்த பரனே காப்பு
சக்தி யொரு பாகம் வைத்த வரசே காப்பு
சங்கரனே யும்பரனே ஞானமூர்த்தி
வெற்றியால் சிதம்பரத்தின் பூசை மார்க்கம்
விளம்புகிறேன் கணேசனுட பாதங்காப்பே !

1. காப்பான அறுவரை குறுக்கே கீறிக்
களங்கமிலா அறுவரை நேரே கீறி
ஆப்பான இருபத்தஞ் சறையு மாச்சு
அடைவான முனைதோறுஞ் சூலம்போடு
தாப்பான முதலறையி னாலு கோணந்
தயவான 'ந' கார மொடு 'அ' காரங் கூட
வாப்பான "ஐயோடு" 'ல' காரந் தானும்
வளமான லக்கமது பத்தாமே .

2. ஆமப்பா அடுத்தறையிற் பிறைதான் கோணம்
அடைவான 'ம' கார மொடு 'இ' காரங் கூடத்
தாமப்பா "கிலியோடு" 'வ' காரந்தானும்
தயவான லக்கமது பதி னெட்டாகும்
வாமப்பா அடுத்தறையில் முக் கோணந்தான்
வளமான 'சி' காரமொடு 'உ' காரந்தானும்
நாமப்பா "சவ்வுடன்" 'ர' காரந் தொட்டு
நலமான லக்கமது பதினாலாமே.

3. ஆமடா இதனருகே யறுகோணந்தான்
அடை வான 'வ' கார மொடு 'எ' காரந்தானும்

தாமடா " ஸ்ரீ முடனே " யகாரங் கூடத்
தயவாக லக்கமது ஆறாம் பாரு
வாமடா இதனருகே வட்டம் போடு
வளமான " யகாரமொடு " ஓங்கார " ந்தான்
நாமடா " ஹரி ஓமென்று " நாட்டி
நலமான ' அ ' காரமொடு லக்க மூன்றே

4. மூன்றான நடுவணையை யெடுத்து மாறி
முன்னுமாய்ச் சக்கர மோரிரு பத்தஞ்சில்
நான்றான சூலத்தி னிடைகள் தோறும்
நாயகனே " றீயும், ஸ்ரீயும் " என்று மாட்டுப்
பான்றான சூலமுனை " ஸ்ரீயை " ப்போடு
பண்பான திரிவட்டம் பாங்காய்ச் சூட்டு
ஊன்றான உள்வட்டம் இதழ் தான் மூன்று
உத்தமனே யிருவட்டமித ழீரெட்டில்

5. எட்டான திரிவட்ட மெண்ணான்கப்பா
இதமாக நடுவட்ட முதலா மாதி
கட்டான ' அ ' கார முதல் ' ச 'கார மட்டும்
கனிவான ஐம்பத்து ஒன்று மாச்சு
கிட்டான உபரேகை வாசல் நாலு
கீழ் வாசல் கணபதிக்குக் " கங் " கு நாட்டு
நாட்டான மேல் வாசல் வடுகன் பீசம்
நாயகனே " வங் " கென்று நாட்டிடாயே

6. நாட்டியே தென்வாசல் பரிதி பீசம்
நலமாக " அம் " மென்று நாட்டு நாட்டு
கூட்டியே வடவாசல் மதியின் பீசம் .
குணமாகச் " சம் " மென்று குறித்துப் போடு
ஆட்டியே யுபரேகை வீதிக்குள்ளே
அவ்வாக இந்திரனில் " மாம் " ( ஆம் ) பாரு

வாட்டியே யக்கினியில் " ரம் " மென்றப்பா
வளமாக எமன்றனிற் " சம் " மென்று போடே

7. போடவே நிருதியிலே " யம் " மேயாகும்
பொலிவான வருணனிலே " வம் " மேயாகும்
சாடவே வாயுதனிலே " யட் " மே போடு
சார்வான குபேரனிலே " ளம் " மே நாட்டு
வீடவே ஈசானஞ் " சம் " மே சேரு
விதமான அட்டதிக்குப் பாலகராச்சு
ஆடவே போகருட கடாட்சத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே.

8. பாடினேன் தமிழெழுத்தில் அகாரந்தொட்டுப்
பண்பான பிரணவத்தின் வரைக்கும் போடு
ஆடியே தசாங்க மென்ற எழுத்தோ பத்து
அப்பனேச் சக்கரத்திற் சுற்றிபோடு
கூடியே தமிழெழுத்தில் அகாரந் தொட்டுக்
கொற்றவனே " ஒவ் " வரையி லுயிராம் பாரு
நாடியே சக்கரத்திற் சுற்றிப் போட
நலமாக ஈராறு மெழுத்து மாச்சே

9. ஆச்சப்பா அசையுட எழுத்துச் " சம் அம் "
அடைவாக மேல் வாசற் கீழேபோடு
பாச்சப்பா வலமங்கி சக்தி பீசம்
பண்பாக " அம் " மென்று பதித்துப் போடு
வாச்சப்பா இடம் பரா சக்தி பீசம்
வளமாகத் " திரோம் " என்று குறித்துப் போடு
வீச்சப்பா வலப்பாக மிடப்பாகந்தான்
விதமான ஐயும் கிலியுஞ் சவ்வுமாமே

10. ஆமடா அம் இம் உம் எம் ஓம் மென்றே
அப்பனே பஞ்சபட்சி இருபுறமும் போடு

வாமடா அம்சம் ஸ்ரீயுமென்று
வளமான மங்குடனே நசியென்றோது
தாமடா கிறீமுடனே றும் மும் கூட்டித்
தயவான விம் முடனே யங் கியென்று
நாமடா நவகிரக பீசமாச்சு
நலமான சக்கரத்திற் சுற்றிப் போடே.

11. போடப்பா " சுரூபி " யென்ற வெழுத்துமப்பா
புகழ் தருவும் கிலீ யல்லோ மதன பீசம்
நாடப்பா கீழ் வாசல் மேலேயப்பா
நலமான ' ஈ 'திரண்டும் பதித்துப் போடு
கூடப்பா சிதம்பரத்தின் பூசை செய்யக்
கூத்தாடுங் கணங்கள் முதலெல்லாமாடும்.
ஆடப்பா போகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே.

12. பாடியே ' அகாரத்தி ' ' லு 'கார மிட்டுப்
பண்பான " ஓங் " காரங் கொண்டு கட்டி
நாடியே யதின் கிழே ' ம ' கார மிட்டு
நலமாக அதன் மேலே ' றீங் ' காரந்தான்
கூடியே " ஹரி " யெழுத்து மேலே வாங்கிக்
குணமாகச் சூலமிட்டு " ஸ்ரீ யை நாட்டு
ஆடியே " சிங் – வங் " கென்று நாட்டு
அடைவாயே கட்சரத்தைப் பதித்துப் போடே.

13. போடு சிந்தா மணிக்குச் " சி " காரமிட்டு
பொங்கமுடன் " மகாரமொடு " யகாரம் போட்டு
ஆடவே " அகார " முடன் விந்தைப்போட்டு
அடைவாஞ் சக்கரத்தில் திரிவாசி சூட்டிக்
கூடச் சிந்தாமணிக்கு பீசமாச்சு
குணமான சக்கரத்திற் பதித்துப்போடு

நாடியே போகருட கடாட்சத்தாலே
நலமான புலிப்பாணி பாடினேனே.

14. பாடியே வலப்புருவம் ' அ ' காரம் போடு
பண்பான புருவயிடம் ' ஆ ' கார மாகும்
நாடியே வலக் கண்ணும் ' இ ' காரம் போடு
நலமான இடக் கண்ணும் ' ஈ ' காரந்தான்
சாடியே வலக்காது ' உ ' காரம் போடு
சமர்த்தான இடக்காது ' ஊ ' காரந் தானே
வாடியே வலக் கன்னம் " இரோம்" நீ போடு
வடிவான இடக் கன்னம் " ஈறோம் " நாட்டே.

15 நாட்டடா வலமூக்கு " இல்லா " வென்று
நாயகனே இடமூக்கு " ஈ லா " வாகும்
ஆட்டடா மேலுதடு " ஏயை " போடு
அடைவான கீழுதடு " ஐயை " போடு
கூட்டடா மேற் றந்தம் ஒவ்வைப்போடு
குணமான கீழ்த் தந்தம் " ஔவை " நாட்டு
மாட்டடா நாவதிலே ' அம் ' மென்றப்பா
மணியான கண்டத்திலே ' ஆ ' கார மெண்ணே

16. எண்ணவே சக்கரத்திற் பதித்த பின்பு
இதமாகச் சாபங்க ணிவிர்த்தி செய்து
நண்ணவே பிராணப் பிரதிட்டை செய்து
நவில்வோம் பூசை சோடசமும் செய்து
அண்ணவே சுகந்த பரிமளங்கள் புட்பம்
அடைவாக வர்ச்சித்துக் கனிகளோடு
தண்ணவே பல காரம் பரமான்னந்தான்
தாம்பூல மிளநீரும் பாலுந் தேனே

17 தேனான பாணக்க மன்னத்தோடு
தெரிவான அறுசுவையு மதுவுஞ் சாத்தி

தானான சர்வமுஞ் சுத்தி வைத்து
தயவாகப் பூசித்துத் தியான மோது
வானான கர்ப்பூர தீப மேற்று
வணங்கவே அட்ட சித்துஞ் சித்தியாகும்
மானான அட்ட சக்தி நிர்த்தஞ் செய்வாள்
வானவரும் லோக மெலாம் வசியமாமே.

18. ஆமடா சிவகிரியில் தண்டாயுதபாணி
ஐயனைத்தான் பூசித் தார் சொல்லக் கேளு
தாமடா கிரேதா யுகத்திலப்பா
தயவான பிரமாவும் பூசை செய்தார்
வாமடா திரேதா யுகத்திலப்பா
வன்மையாக் கவுசிகர் தாமகிழ்ந்து செய்தார்
காமடா துவாபரத்திற் போக நாதர்
கலியுகத்திற் புலிப்பாணி பூசித்தேனே.

19. பூசித்த ஞானமது தொண்ணூற்றாறு
பொங்கமுடன் பல திரட்டு நூறுமாகும்
ஆசித்தேன் கொக் கோகம் நூறு பாதி
அப்பனே ஜாலமது ரெண்டு நூறு
வாசித்தேன் சோதிடந்தான் முந்நூறாகும்
வளமான வயித்தியமோ ஐந்நூறாகும்
வீசித்தேன் சண்முகத்தின் பூசை மார்க்கம்
விதமாக முப்பதிலே விளம்பினேனே.

20. விளம்பவே சிமிழ் வித்தை யிருபத்தஞ்சு
விதமான தேவியுட பூசை மார்க்கம்
தளம்பவே யிருபதோடொன்றி னுள்ளே
தயவாகச் சொல்லி வைத்தேனன்றாய் பாரு
கிளம்பவே சிதம்பரந்தா னிருபத்தஞ்சு
கெட்டியாய்ப் பாடினே னுகந்துபாரு

வளம்பவே போகருட கடாசத்தாலே
வளமான புலிப்பாணி பாடினேனே—

21. பாடினேன் " யநமவசி " வசிய மாகும்
பண்பான " மசிவயந " மோகனமே சித்தி
ஆடியே " வசிமநய " அழைப்பு மாகும்
அப்பனே " நமசிவய " தம்பனமே செய்யும்
கூடியே " வயநமசி " யுச் சாடனந்தான்
குணமான " யவசிமந " பேதனந்தான்
தேடியே " நயவசிம " வித்து வேஷணம்
" சிவயநம " மாரணமாய்ச் செப்பலாமே.

22. ஆமடா வசியமுடன் தம்பனம் பேதனம்
அடைவான நடுவணையைப் பிடித்துமாறி
தாமடா மோகனமு மழைப்புமப்பா
தயவாக ரெண்டெழுத்தையெடுத்து மாறி
வாமடா நாலெழுத்தை மாறில் வித்து வேஷணம்
மன்னு முச்சாடனங்கால் தலையாப்போடு
தீமடா மாரணமாங் கடையெழுத்தை மாறித்
தீர்ந்த சக்கரமெலா மாரணமாமே.

23. ஆமடா காரியம் வசியமாகும்
அப்பனே வங்கம் மோகனமே சித்தி
தாமடா பொன்னதுவு மழைப்புமாகும்
தயவான செம்பது தம்பனமே சித்தி
வாமடா வெள்ளிய முச்சாடிக்கும்
வளமான குருத்தோலை வித்து வேடணம்
போமடா இரும்பு பேதனமே யாகும்
பொங்கமுறு வெள்ளி மாரணந்தானாமே.

24. தானென்ற வசியமுடன் தம்பன மோகனம்
தயவான அழைப்பு முதலியவை நாலுக்கும்

கோனென்ற ஆள்காட்டி விரலே நீளம்

குணமான அகலமப்பா பெருவிரல் நீளம்

தேனென்ற பேதன மாரணம்வித்து வேஷணம்

தெளிவான உச்சாடன மிவை நாலுக்கும்

பானென்ற பவித்திர விரல் நீளமப்பா

பகர்ந்த சிறு விரனிகள மகலமாமே

25. ஆமடா இறையாறு வீசமாகும்

அப்பனே பனிரண்டு அரைக்காலாகும்

தாமடா மூவெட்டுக் காலே யாகும்

தயவாக இதிலிரட்டியரையே யாகும்

வாமடா இதிலிரட்டி முழுதென்பார்கள்

வளமான கனமப்பா நெற்கனந்தான்

நாமடா வீசமது ஒரு நெல்லாகும்

நலமான சிதம்பரத்தின் பூசைமுற்றே

**சிதம்பர வழிபாடு 25. பாடல்கள்**
**முற்றும்**

# புலிப்பாணி சித்தர் அருளிய சிதம்பரம் – 25 தெளிவுரை.

## காப்பு

ஓங்கார முகமுடைய கணபதியை நமக்கு அருளிய மாபெரும் தெய்வமே காக்க, அருள் வடிவமான இயல்புகள் எங்கும் பெருநிறைவாய் நின்று காக்க. மானுட ஆன்மாவுக்கு இறவா வரம் வழங்கும் மறைமுடிவே காக்க. ஆணவம் - கன்மம் - மாயை என்னும் இரும்பு - பொன் - வெள்ளி என்னும் - மலபகைகள் நெருப்பால் எரித்த பரம் பொருளே காக்க. அம்மையப்பராக விளங்கும் மேலை நிலைப் பொருளே காக்க. பொலம் பொசிக்கி நலம் அருளும் மேனிலை ஞான வடிவமே என்றும் வெற்றியைத் தரும் திருவம்பல மென்னும் சிதம்பர வழிபாடு முறைகளைச் சொல்ல வந்ததால் கணநாதர் திருவடி என்றும் துணை நின்று காப்பாக விளங்குக.

**பாடல்1** படுக்கைக் கோடு ஆறு போட்டு அதன் மேல் நெடுக்கைக் கோடு ஆறு வரைந்து பார்த்தால் 25 அறைகள் வரும். அப்படி போடப்பட்ட அறைகளின் முனைகளில் திரிசூலம் போடவும். 25 அறைகளில் முதல் அறையில் சதுரமான நாலு கோணம் போட்டு, அக்கோணத்தில் " ந " -கரம் என்ற அக்கரம் 'அ' -கரம் என்ற அக்கரம், அதனோடு "ஐயும்" என்ற வித்தும் எழுதி, பஞ்ச பூத எழுத்தான " ல "-கரம் எழுதி அதனில் எண் கணித எழுத்து பத்து வரைக. ( 'ய'- கரம் ) or ( க.0.)

**பாடல் 2** இரண்டவாது அறையில் இருகோணமான பிறை கோணம் போட்டு, அதில் ஐந்தெழுத்தில் ஒன்றான " ம " - கரம் என்ற அக்கரம் எழுதி, உயிரெழுத்தில் 'இ' - கரம் என்ற அக்கரம் எழுதி, அதனோடு " கிலியும் " - என்ற வித்து பதித்து , பஞ்சபூதமான எழுத்தில் 'வ' -கரம் வரைந்து , பின் எண்ணில் பதினெட்டு எண்ணை பதிக்க வேண்டும். ( ய அ) or (க அ) இதற்கு அடுத்த அறையில் முக்கோணம் வரைய வேண்டும். அந்த முக்கோணத்தில் 'சி' - கரம் பதிவு செய்து, உயிரில் 'உ' - கரம் எழுதி,வித்தில் " சவ்வும் " என்பதை வரைந்து பஞ்ச - பூதத்தின் எழுத்தான 'ர' - கரம் வரைந்து, அதில் பதினாலு என்ற கணித எண்ணை வரைக என்பதாம். ( கச) or ( ய ச)

**பாடல் 3** நான்காவது அறையில் ஆறு கோணம் வரைந்து, அதில் ஐந்தெழுத்தின் கண்ணுள்ள 'வ' - கரம் அக்கரம் வரைந்து, உயிரில் உள்ள 'எ' - கரம் என்ற எழுத்து எழுதி, அடுத்து வித்தெழுத்தான "ஸ்ரீயும்" - வரைந்து, பஞ்ச பூத யெழுத்தில் நான்காவதாகயிருக்கும் 'ய' - கரம் எழுதி, அதே அறையில் எண் கணித எண்ணான (சா) ஆறு எண்ணை வரைந்து, இதற்கு அடுத்த அறையில் வட்டம் போடவேண்டும். அந்த வட்டத்தில் பஞ்சாகரத்திலுள்ள எழுத்தான "ய" - கரம் வரைந்து, உயிரெழுத்தில் 'ஓ' - ங் காரம் வரைந்து, வித்தெழுத்தான "ஹரி ஓம்" என்று அதில் பதித்து, பஞ்சபூத எழுத்தான 'அ' -கரம் அதில் வரைய வேண்டும். பின் எண்ணெழுத்தான மூன்று எழுதி பதித்து விடுக. (நு)

**பாடல் 4.** மேற்கண்ட முறையில் ஐந்து வித கோணங்கள் ஐந்து அறைகளில். பதித்து வரைந்தது போல் மற்ற 20 அறைகளிலும் பதிவு செய்தால் 25 அறைகளிலும் ஐந்து வித கோணங்கள் நிரம்பும். அதாவது "நமசிவய" என்று வரும் பஞ்சாக்கரம், அந்த பஞ்சாக்கரத்தின் நடுவாக நிற்கும் எழுத்தை முன்னதாகக் கொண்டு மாற்றி மாற்றி அறைகளில் எழுதி பூர்த்தி செய்யவேண்டும். எவ்வாறெனில்

| | | | | |
|---|---|---|---|---|
| ந | ம | சி | வ | ய |
| சி | வ | ய | ந | ம |
| ய | ந | ம | சி | வ |
| ம | சி | வ | ய | ந |
| வ | ய | ந | ம | சி |



இவ்வாறாக 25 அறைகளிலும் மாறி மாறி எழுதினால் மந்திர சக்கரமாக பதிந்து நிற்கும்.

ஒவ்வொரு அறையின் மேல் சூலம் போடப்பட்டுள்ள இடைவெளியில் "றீயும் - ஸ்ரீ யும்" என்ற வித்துக்கள் எழுத வேண்டும்.

அந்த சூலத்தின் முனையில் "ஸ்ரீம்" - என்ற வித்து எழுத வேண்டும். அதனை அடுத்தடுத்து வட்டங்கள் மூன்று வரைந்து பின் முதல் உள் வட்டத்தை மூன்று சமபாகமாக பிரித்து 3 - இதழாக பதிக்க வேண்டும். அடுத்துள்ள இரண்டாவது வட்டத்தை 16 சம பாகமாக்கி 16 இதழாக வரைய வேண்டும்.

பாடல் 5. மூன்றாவது வட்டத்தை 32 சமபாகமாக்கி 32 இதழாக வரையவேண்டும். உள் வட்ட நடுவில் ஆதி என்ற அம்மையின் இடமாகும். அதில் " ஸ்ரீம் " - என்ற வித்து போட்டு வட்டம் போடுக. மற்ற வட்ட இதழ்களில், " அகர " முதல் " சகர " முடிய ஆக 51 - வித்தெழுத்துகள் பதிவு செய்க. அதனை யடுத்து மந்திர விஞ்ஞை சுற்றி உபரேகையும், வாசல் நாலும் வரைந்து, பின் வாசல் தோறும் வித்துக்கள் எழுதுக. கிழக்கு வாசலில் கணபதியின் வித்தெழுத்து " கங் " - என்று எழுதுக. மேற்கு வாசலில் வடுகனின் வித்து " வங் " - என்று எழுதுக.

பாடல் 6. தெற்கு வாசலில் சூரியனின் வித்து " அம் " என்று எழுதுக. வடக்கு வாசலில் சந்திரனின் வித்து " சம் " என்று குணமாக எழுதுக. உபரேகை வீதிகளில் கிழக்கே இந்திரனின் வித்து "ஆம்" என்று எழுதுக. தென் கிழக்கு வீதியில் தீக்கடவுளின் வித்து " ரம் " என்று எழுதுக . தெற்கு வீதியில் உயிர் வாங்கும் எமனின் வித்து " சம் " - என்று எழுதுக.

பாடல் 7. தென் மேற்கு வீதியில் நிருதியின் வித்து " யம் " என்று எழுதுக. மேற்கு வீதியில் மழைக்கடவுள் என்று கூறும் வருணனின் வித்து " வம் " - என்று எழுதுக. வடமேற்கு வீதியில் காற்று தேவனின் வித்து " யம் " - என்று எழுதுக. வடக்கு வீதியில் குபேரனின் வித்து " ளம் " - என்று எழுதுக. வடகிழக்கு என்ற வீதியில் ஈசானியனின் வித்து " ஸம் " என்று எழுதுக. இப்படி எட்டு திக்கு வீதிகளில் திசை காவலரின் வித்துக்கள் பதிவானால் திக் பாலகர் பொருந்துவர் என்பர்.

இதனை எமது ஆசான் போகருடைய கருணை மிகு அருளினால் பாடினேன்.

பாடல் 8. மேற்கண்டவாறு பாடிய நான் தமிழ் மொழியின் கண்ணுள்ள எழுத்து " அகார " ம் தொடங்கி " ஓங்காரம் " முடிய பாடினேன். சூலத்தின் மேல் நிற்கும் படியான சக்கரத்தில் "தசாங்கம் " என்ற எழுத்தான பத்து என்று கூறப்படும் ' ய ' -கரம் சக்கரத்தைச் சுற்றி பதிக்கவும். அந்த சக்கரத்தைச் சுற்றி 12 உயிர் எழுத்துக்களான , " அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - அக்கரங்கள் பதிவு செய்க.

பாடல் 9 அசபை என்றால் பேசப்படாத எழுத்து என்பர். அந்த எழுத்து " சம் அம் " என்பர். இந்த பேசப்படாத

சொல்லான அசபை வாசலின் கீழும் மேலும் வரைக. வலப்புறத்தில் சக்தியின் நாத வித்து " ஹம்" என்று பதிக்க. இடபுறம் பராசக்தியின் வித்து "திரோம்" என்று பதிக்க. " ஐயும் - கிலியும் - சவ்வும்" என்கிற நாத வித்துக்கள் சக்கரத்தின் வலப்புறம் - இடப்புறம் வரைந்து பதிக்க.

**பாடல் 10 .** பஞ்சபட்சியின் வித்துக்களான " அம் - இம் - உம் எம் - ஒம் " சக்கரத்தில் இரண்டு புறத்தில் பதிக்க . பின்பு "ஓம் - அம் சம் - ஶ்ரீயும் - மங் - நசி " என்று கூறி சாப விமோசனம் செய்க. நவகோளின் வித்துக்களான " கிறீம் - றும் - உங் - விம் யங் -" என்று சக்கரத்தைச் சுற்றி போடுக.

**பாடல் 11** " சுரூபி " - என்ற வித்தும், மதன பீசமான " உம் கிலீம்" - என்ற வித்தும் கீழ் வாசல் - மேல்வாசல் பதிக்க இப்படியாக அனைத்தும் பதித்து வழிபட்டால் கூத்து நிகழ்த்தும் கணங்கள் முதலெல்லாம் நர்த்தனமிடும். இது எமது ஆசான் போகரின் கருணையின் உதவியால் புலிப்பாணி என்ற பெயருடைய யாம் பாடினோம்.

**பாடல்12.** முதலில் ' அ ' - கரம் எழுதுக. அகரத்தின் வயிற்றில் ' உ ' -கரம் எழுதுக. " அ " - இப்படி வரை.

அதனைச் சுற்றி ' ஒ ' - காரம் வரைக. அதாவது.




இப்படி வரைக . ஓங்காரத்தின் கீழ் ' ம ' கரம் வளைத்து அதன் மீது " றீங் " என்ற வித்து பதிக்க . பின்பு அரியெழுத்து என்று கூறப்படும். இந்த எழுத்து வளைத்து மேலே வாங்கி, அதில் சூலமிட்டு, அதன் மீது "ஶ்ரீ "- யை பதித்து எழுதுக . அதாவது.



இப்படி வரைக. அடுத்து

மற்ற இரு சூல முனைகளின் மேலே " சிங் - வங் " என்று எழுதுக.




இப்படியாக எழுதுக.

**பாடல் 13.** சிந்தாமணியின் வித்து 'சி' - காரம் என்று கூறப்படும். இதனுடன் 'ம' -காரம், 'ய' -காரம் பதித்து எழுதி, அதனுடன் 'அ' - காரம் என்று வரைந்து அதற்கு விந்து என்ற வட்டம் போடுக.




இதுபோல் வரைக.

இதனை சக்கரத்தை சுற்றி போடவேண்டும். திரிவாசி சுற்றி அதில் மேற்கண்ட சக்கரத்தை போட்டு முடித்தால் சிந்தாமணியின் வித்து முழுமையாகும். இதனை எமது குருநாதர் அருளின் மிகையால் யாம் பாடி வழங்கினோம்.

**பாடல் 14.** ஓங்காரத்தை மானுடக வடிவமாக கருதி பாடும் போது, அதில் வலபுருவம் 'அ' வித்துயிர் எழுதுக. இடபுருவம் 'ஆ'. வித்துயிர் எழுதுக. வலக்கண்ணுக்கு 'இ' - வித்துயிர் எழுதுக. இடக்கண்ணுக்கு 'ஈ' - வித்துயிர் எழுது. வலக்காதுக்கு 'உ' வித்துயிர் எழுதுக. இடக்காதுக்கு 'ஊ' - வித்துயிர் எழுதுக. வலக்கன்னத்தில் " இறோம் "- என்ற வித்து எழுதுக. இடக்கன்னத்தில் "ஈறோம் "-என்ற வித்து எழுதுக.

**பாடல் 15.** வலமுக்குக்கு "இல்லா" - என்ற வித்து எழுதுக. இடமூக்குக்கு "ஈலா" என்ற வித்து எழுதுக. மேலுதடுக்கு 'எ' என்ற வித்துயிர் எழுதுக. கீழு தடுக்கு 'ஐ'- என்ற வித்துயிர்

எழுதுக. மேல் தந்தம் ( மேல் பல்லில் ) ' ஓ ' - என்ற வித்துயிர் எழுதுக. கீழ் தந்தம் ' ஔ' -என்ற வித்துயிர் எழுதுக. நாக்கில் "ஹம்" -என்ற வித்து எழுதுக . கண்டத்தில் ' ஆ ' -என்ற வித்து எழுதுக.

**பாடல் 16.** முறையாக முழுமையாக மகா சக்கரம் வரைந்து அதில் முழுதுமாக வித்தெழுத்துக்கள் பதிவு செய்து நிறைவுக்குபின், அந்த மந்திரச்சக்கரத்திற்கு நாவேறு என்றுக் கூறப்படும் சாபம் நீக்கி, அந்த மந்திர சக்கரத்திற்கு உயிர் ஊட்டல் - நிறுவுதல் பதினாறு வித பொருளுடன் வழிபாட்டு முறையில் செய்து நலம் தரும் நறுமணநெய்கள் - வாசமுள்ள மலர்கள் கொண்டு போற்றி வழிபடவேண்டும். வெற்றிலைபாக்கு, பழம் - தேங்காய் - பலகாரம் - அன்னம் - இளநீர் - பால் - தேன் - பானகம் - அறுசுவை தரும் படையல்கள் அதற்கு சுற்றிலும் வைத்து புகைக்காட்டல் ஒளிக்காட்டல் போன்று செய்து வணங்கி வழிபட்டால் எண்மாசித்திகள் நமக்கு உடமையாகும். அதனால் எண்பெரும் அம்மையர்கள் வெளிப்பட்டு செயல் புரிவார்கள். தேவர்கள் மற்றும் உலகம் எல்லாம் நமக்கு வசியமாகும்.

**பாடல்18** முருகப்பெருமான் சிதம்பர மகா மந்திர விஞ்ஞையில் சிவனை வழிபட்டார். கிரேதாயுத்தில் தயா உள்ளம் கொண்ட பிரமதேவர் வழிப்பட்டார். திரேதாயுகத்தில் உறுதியுடன் கவுசிகமுனிவர் மனமகிழ்வுடன் வழிபட்டார். துவாபரயுகத்தில் சித்தர் போகநாதர் வழிபட்டார். கலியுகத்தில் புலிப்பாணியான யாம் வழிபட்டோம்.

**பாடல் 19.** வழிபாட்டுக்குரிய நூல்களான ஞானம் - 96, பலதிரட்டு 100, கொக்கோகம் - 150, சாலம் 200, சோதிடம் 300, மருத்துவம் 500, சண்முகவழிபாடு 30 போன்ற நூல்கள் கூறினேன்.

**பாடல் 20** சிமிழ் வித்தை 25, தேவி வழிபாடு 21, சிதம்பரம் - 25 , ஆக இத்தனை நூல்கள் எமது குரு நாதர் போகரின் அருளால் பாடி வைத்தேன்.

**பாடல் 21.**

| | | |
|---|---|---|
| வசியம் | = | யநமசிவ |
| மோகனம் | = | மசிவயந. |
| அழைப்பு | = | வசிமநய |

| | | |
|---|---|---|
| தம்பணம் | = | நமசிவய. |
| உச்சாடனம் | = | வயநமசி. |
| பேதனம் | = | யவசிமந. |
| வித்துவேடனம் | = | நயவசிம |
| மாரணம் | = | சிவயநமஎன்று கூறப்படுகிறது. |

**பாடல்: 22**

வசியம் என்ற கருமத்தொழில் நடத்தும் பஞ்சாக்கரமான "யநம சிவ " என்பர். அந்த பஞ்சாக்கரத்தில் நடு எழுத்து எடுத்து மாற்றினால் மோகனம் என்று கூறப்படும் பஞ்சாக்கரமான " "மசிவயந " - வரும்.

பேதன பஞ்சாக்கரமான " யவசிமந" - என்பர். அதில் 2 வது எழுத்திலிருந்து எடுத்து மாற்றி எழுதினால் அழைப்பு என்று கூறப்படும் பஞ்சாக்கரமான " வசிமநய " - வரும்.

தம்பனம் என்று கூறப்படும் பஞ்சாக்கரமான " நமசிவய " என்ற பஞ்சயெழுத்தில் நான்காவது எழுத்து எடுத்து மாற்றி எழுதினால் " வயநமசி " - என்ற உச்சாடன கருமத் தொழில் செய்யும் பஞ்சாக்கரம் வரும்.

அழைப்பு என்று கூறப்படும் கருமத் தொழிலின் பஞ்சாக்கரமான " வசிமநய " - ஐந்தெழுத்தில் நான்காவது எழுத்து எடுத்து மாற்றி எழுதினால் " நயவசிம " என்று கூறப்படும் வித்துவேடனம் வரும்.

உச்சாடனம் என்று கூறப்படும் " வயநமசி " ஐந்தெழுத்தில் கால் என்று கூறப்படும் வகரத்திற்கு முன்னால் தலை என்று கூறப்படும் சிகரம் எழுதினால் மாரணம் என்று கூறப்படும் கருமத் தொழிலுக்கு உண்டான ஐந்தெழுத்துக்கள் " சிவயநம " என்று வரும். இதனால் மந்திர சக்கரம் முழுதும் மாரணம் செய்யும்.

**பாடல் 23.** காரியம் வசியம் செய்யும் . வங்கம் மோகனம் செய் யும். பொன் அழைப்பு செய்யும். செம்பு தம்பனம் செய்யும். வெள்ளீயம் உச்சாடனம் செய்யும். குருத்தோலை வித்து வேடனம் செய்யும். இரும்பு பேதனம் செய்யும் . வெள்ளி மாரணம் செய்யும்.

**பாடல் 24 :** - வசியம், தம்பனம், மோகனம், அழைப்பு ஆக நாலுக்கு ஆள் காட்டி விரல் நீளமும் பெருவிரல் அகலமும் இருக்கவேண்டும்.

பேதனம், மாரணம், வித்துவேடனம், உச்சாடனம் ஆக நாலுக்கும் மோதிர விரல் நீளமும் - சிறுவிரல் அகலமும் அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

**பாடல் 25** : இறைவன் அருளை முழுமையாக அடையவேண்டுமானால் 96 - தத்துவங்கள் நம் வசப்பட்டு செயலற்று நின்றால் அந்த மானுட ஆன்மா முழு மானுட ஆன்மாவாக அருளால் நிறைந்து ஏகம் என்ற நிலை அடைந்து சிதம்பர பூசையின் அகப்பொருள் உணரலாம்.

96 - தத்துவங்கள் படிப்படியாக கீழ்வருமாறு தேய்ந்து வசப்படுமானால் மானுட ஆன்மா முழு இறையருள் ஆன்மாவாக திகழ்ந்து சிதம்பரத்தின் கண் மரணமில்லா பெருவாழ்வுடன் ஒருமைப்பெற்று ஏகப்பொருள் கலந்து சோதி வடிவம் கொண்டு முழுமை அடைந்தால் சிதம்பரபூசைகள் முடிவுறும்

| | | | |
|---|---|---|---|
| 6 | பங்கு | 1/6 | வீசமாகும் |
| 12 | பங்கு | 1/8 | அரைக்காலாகும் |
| 24 | பங்கு | 1/4 | காலாகும் |
| 48 | பங்கு | 1/2 | அரையாகும் |
| 96 | பங்கு | 1 | முழுமையாகும் |

96.தத்துவங்களை மானுடன் படிப்படியாக விகிதாச்சாரப்படி குறைத்துக்கொண்டே வந்தால் சிதம்பர ரகசியம் என்னவென்று வெளிப்படும். அதனால் அதன் எல்லையை கண்டு அதில் கலந்தால் அதன் வழிபாடு முற்றுப்பெறும். மானுடன் எப்படி பெருக்கினாலும் படிப்படியாக 96 தத்துவங்கள் ஒழியும் என்பதை கணக்கியல் முறையில் காணலாம். அதாவது

| | | |
|---|---|---|
| 16/1 | X 6 = | 96 தத்துவங்கள் |
| 8/1 | X 12 = | 96 தத்துவங்கள் |
| 4/1 | X 24 = | 96 தத்துவங்கள் |
| 2/1 | X 48 = | 96 தத்துவங்கள் |
| 1 | X 96 = | 96 தத்துவங்கள் |

சிதம்பரத்தின் மகா மந்திர விஞ்ஞை பதிக்க தகடுகளின் கனம் நெல்லின் அளவுடையதாக இருக்க வேண்டும். அந்த நெல்லின் கனம் வீசமாகும். இப்படி நலமாக அமையும் சிதம்பர வழிபாடு முடிவு பெறுகிறது.



படம் 1 -ல் முதலாவது வரி முதல் நான்காவது வரி வரையில் மேற்கண்டவாறு வரைந்து கொள்ளுமாறு கூறப்படுகிறது.

## அறைகளில் நிற்கும் கோணங்கள்




பாடல் - 1 –2–3. ஐந்த வது வரியிலிருந்து 24 வரி முடிய பாடலில் கூறியவாறு வரைந்து கொள்ளுமாறு கூறப்படுகிறது.

பாடல் - 4 -ல் 25, 26. வரிகளில் 5 கட்டங்களிலுள்ள கோணங்களை நடுவிலுள்ள கோணத்தை முதலாக வரைந்து 25 அறைகளிலும் போட்டுக் கொள்ளுமாறு கூறப்படுகிறது.

## சூலங்களின் இடையில் வித்தெழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| றீயும் | றீயும் | றீயும் | றீயும் | றீயும் |
| ஸ்ரீயும் | ஸ்ரீயும் | ஸ்ரீயும் | ஸ்ரீயும் | ஸ்ரீயும் |
| கிறீம் -ரூம்- | கிறீம் -ரூம் | கிறீம் -ரூம் | கிறீம் -ரூம் | கிறீம் - ரூம் |
| உங் - விம் | உங் -விம் | உங் - விம் | உங் - விம் | உங் -விம் |
| யங் . | யங் . | யங். | யங். | யங். |

1. பாடல் - 4-ல் 27, 28 வரிகளில் மேற்கண்டவாறு சூலத்தின் இடைவெளிகளில் மேற்கண்ட வித்தெழுத்துக்கள் எழுதுமாறு கூறப்படுகிறது.



### சூலத்தின் மேல் நிற்கும் சக்கரம்

2. பாடல் - 10 -ல் வரி 77 முதல் -80 வரை கூறப்பட்ட செய்திகள் வரையப்பட்டுள்ளது.

பாடல் 8 -ன் படி வரி 57 - முதல் 64 வரை உள்ள செய்திகள் வரையப்பட்டுள்ளது.

பாடல் -4 -5 ல் வரி 29 முதல் 36 வரை கூறப்பட்ட செய்திகள் இதில் வரையப்பட்டுள்ளது.

## சக்கரத்தின் வெளிவாசல்கள்




**பாடல் 5** *வரி 37 -முதல் 56 முடிய கூறப்பட்ட செய்திகள் மேற்கண்ட படத்தில் வரையப்பட்டுள்ளது.*

**பாடல் 6**

**பாடல் 7**

**பாடல் 8**

**பாடல் 9** *ல் வரி 65 முதல் 74 -வரை கூறப்பட்ட செய்திகள்*

**பாடல் 10** *மேற்கண்ட படத்தில் வரையப்பட்டுள்ளது.*

**பாடல் 11ல்** *வரி 81 -முதல் 88 வரை கூறப்பட்ட செய்திகள் வரையப்பட்டுள்ளது.*

## ஒவ்வொரு கோணத்தில் பொருந்தும் ஓங்காரமும் உயிரெழுத்துக்கள்




பாடல் 12 } 89 முதல் 96 வரிகளின் படி வரையப்பட்டது
பாடல் 14 } 105 முதல் 120 மேற்கண்ட வரைபடம் மற்றும்
பாடல் 15 } முதல் உயிரெழுத்துக்கள் அனைத்தும் 5 கோணங்கள் பொருந்தி நிற்கும்.

## சிந்தாமணி வித்து திரிவாசியில் நிற்கும்




பாடல் 13 ல் -97 வரி முதல் 99 வரை கூறப்பட்ட செய்திகள் இங்கு வரையப்பட்டுள்ளது. திரிவாசியில் பொருந்தும் சக்கரம்

25 துறையின் மேல் ஓங்கார திரிவாசி பொருந்தும்




பாடல் 13-ல் வரி 97 முதல் 104 வரை கூறிய செய்திகள் மேற்கண்டவாறு வரையவேண்டும்.

## பூர்த்தியான முழு நாற்கோணம்




1. முதல் அறையில் நாற்கோணம்.
2. ' ந ' கரம் - பஞ்சாக்கரம்.
3. ' அ' - கரம் - உயிர் அக்கரம்
4. ஐயும் - பெண் வித்தெழுத்து
5. 'ல'கரம் - பஞ்சபூத அக்கரம்
6. க 0. (பத்து) - கணக்கியல் எழுத்து
7. 'அ' - வலப்புருவம்
8. ஆ - இடப்புருவம்
9. இ - வலக்கண்ணு
10. ஈ - இடக்கண்ணு
11. உ - வலக்காது.
12. ஊ - இடக்காது
13. இரோம் - வலக்கன்னம்
14. ஈறோம் - இடக்கன்னம்
15. இல்லா - வலமூக்கு
16. ஈலா -இடமூக்கு
17. ஏ - மேலுதடு
18. ஐ - கீழுதடு
19. ஒ - மேல் பல்
20. ஔ - கீழ் பல்
21. அம் - நாக்கு
22. ஆ - கண்டம்

## பூர்த்தியான முழு பிறை கோணம்




1 - 2வது அறையில் பிறைக் கோணம்.
2. மகரம் - பஞ்சாக்கரம்.
3. இகரம் - உயிர் அக்கரம்.
4. கிலியும் - பெண் (சக்தி) வித்தெழுத்து.
5. 'வ' கரம் · பஞ்ச பூத அக்கரம்.
6. கஅ. ( பதினொட்டு ) - கணக்கியல் எழுத்து.
7. 'அ' - வலப்புருவம்
8. ஆ - இடப்புருவம்
9. இ - வலக்கண்
10. ஈ - இடக்கண்
11. உ - வலக்காது
12. ஊ - இடக்காது
13. இரோம் - வலக்கன்னம்
14. ஈறோம் - இடக்கன்னம்
15. இல்லா - வலமூக்கு
16. ஈலா - இட மூக்கு
17. ஏ - மேலுதடு
18. ஐ - கீழுதடு
19. ஒ · மேல் பல்
20. ஔ - கீழ் பல்
21. அம் · நாக்கு
22. ஆ - கண்டம்

## பூர்த்தியான முழு முக் கோணம்




1. 3 வது அறையில் முக்கோணம்
2. சிகரம் - பஞ்சாக்கரம்
3. உகரம் - உயிர் அக்கரம்
4. சவ்வும் - பெண் ( சக்தி ) வித்தெழுத்து.
5. ' ர ' கரம் - பஞ்சபூத அக்கரம்.
6. க. ( பதிநாலு ) கணக்கியல் எழுத்து.
7. அ - வலப்புருவம்
8. ஆ - இடப்புருவம்
9. இ - வலக்கண்
10. ஈ - இடக்கண்
11. உ - வலக்காது
12. ஊ - இடக்காது
13. இரோம் - வலக்கன்னம்
14. ஈறோம் - இடக்கன்னம்
15. இல்லா - வலமூக்கு
16. ஈலா - இடமூக்கு
17. ஏ - மேலுதடு
18. ஐ - கீழுதடு
19. ஒ - மேல் பல்
20. ஔ - கீழ் பல்
21. அம் - நாக்கு
22. ஆ - கண்டம்.

## பூர்த்தியான முழு ஆறுகோணம்




1. 4 - வது அறையில் அறுகோணம்.
2. 'வ' கரம் - பஞ்சாக்கரம்
3. எகரம் - உயிர் அக்கரம்
4. ஶ்ரீயும் - பெண் (சக்தி) வித்தெழுத்து
5. யகரம் பஞ்ச பூத அக்கரம்
6. சா (ஆறு) கணக்கியல் எழுத்து.
7. அ - வலப்புருவம்
8. ஆ - இடப்புருவம்
9. இ - வலக்கண்.
10. ஈ - இடக்கண்
11. உ - வலக்காது
12. ஊ - இடக்காது
13. இரோம் - வலக்கன்னம்
14. ஈறோம் - இடக்கன்னம்
15. இல்லா - வலமூக்கு
16. ஈலா - இடமூக்கு
17. ஏ - மேலுதடு
18. ஐ - கீழுதடு
19. ஒ - மேல் பல்
20. ஔ - கீழ் பல்
21. அம் - நாக்கு
22. ஆ கண்டம்

## பூர்த்தியான முழுவட்டக் கோணம்




1. 5 வது அறையில் வட்டக் கோணம்.
2. 'ய' கரம் - பஞ்சாக்கரம்
3. 'ஒ' - கரம் - உயிர் அக்கரம்
4. ஹறி ஓம் - பெண் (சக்தி) வித்தெழுத்து.
5. 'அ' - கரம் - பஞ்சபூத அக்கரம்
6. ரு (மூன்று) கணக்கியல் எழுத்து.
7. அ - வலப்புருவம்.
8. ஆ - இடப்புருவம்.
9. இ - வலக்கண்
10. ஈ - இடக்கண்
11. உ - வலக்காது
12. ஊ - இடக்காது
13. இரோம் - வலக்கன்னம்
14. இறோம் - இடக்கன்னம்
